| | |
|---|---|
| அ.வ.எண். | 23/2017 |
| பெயர் | கலாவதி |
| கணவர் பெயர் | திருவேங்கடம் |
| சாட்சி | வா.சா.1 |
| நாள் | 29.01.2020 |

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பிறந்தது ஜலகண்டாபுரத்தில். என்னை ராசிபுரத்தில் திருமணம் செய்து கொடுத்தனர். 1996ல் எனக்கு திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு பின்னிட்டு என்னுடைய கணவர் வீடான ராசிபுரத்தில் தான் குடியிருக்கிறேன் என்றால் ஆமாம். தாவா சொத்து ஜலகண்டாபுரத்தில் உள்ளது என்றால் ஆமாம். தாவா சொத்து எனக்கு எவ்வாறு பாத்தியம் என்றால் என்னுடைய தாயார் தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்துள்ளார். தாவா சொத்து என்பது காலி நிலம். அதில் வீடு இல்லை என்றால் ஆமாம். தாவாவில் காண்பிக்கப்பட்டுள்ள 2 அயிட்ட சொத்துக்களும் காலியாக உள்ளதா என்றால் ஆமாம். தாவா சொத்தில் நான் அனுபவத்தில் இல்லை என்றால் நான் ராசிபுரத்தில் உள்ளேன் என்னுடைய தம்பி மணிகண்டன் பொறுப்பில் கொடுத்துள்ளேன். அவர் தான் பார்த்து வருகிறார். தாவா அ அட்டவணை சொத்தில் வீடு உள்ளது எனவும், அதில் மணிகண்டன் குடியிருக்கிறார் என்றால் ஆமாம். வழக்கு ஆ அட்டவணை சொத்தில் 24 * 5 1/2 அடி =132 சதுரடி பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல. எனக்கு வா.சா.ஆ.5 தானசெட்டில்மெண்ட் மூலம் எழுதிவைத்த சொத்துக்கள் முழுவதையும் அ அட்டவணை சொத்தாக காண்பித்துள்ளேன் என்றால் ஆமாம். வா.சா.ஆ.5 ல் 32.75 சதுர மீட்டரில் ஆர்சிசி தார்சு வீடு உள்ளது எனவும், கதவு எண்ணும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். காலியிடமும் உள்ளது. வழக்கில் 2 வது தாக்காக வா.சா.ஆ.5 ல் குறிப்பிடப்பட்டுள்ள பொது வழி நடை பாத்தியத்தை காண்பிக்கவில்லை என்றால் காண்பித்துள்ளேன். நான் மேற்படி வீட்டையும், 2 வது தாக்கையும் வழக்கில் கூறவில்லை என்றால் கூறியுள்ளேன். வா.சா.ஆ.7 வரைபடத்தில் வா.சா.ஆ.5 ல் கூறியுள்ள 2 வது தாக்கை காண்பிக்கவில்லை என்றால் காலி இடமாக இருந்ததை ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக கூறியுள்ளேன்.

பிரதிவாதிகள் வழக்குரைஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

**ஒம்/-திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**மேட்டூர்.**